# BSNLஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

## தொடர் வெற்றிக்கு கட்டியம் கூறிய
## விருதுநகர் விரிவடைந்த மாவட்ட செயற்குழு

அன்பார்ந்த தோழர்களே,

7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தல் மற்றும் இன்முகத்துடன் சேவை ஆகிய இரு ஆய்படு பொருட்களையும் விவாதிக்க BSNL ஊழியர் சங்கத்தின் விருது நகர் மாவட்ட விரிவடைந்த செயற்குழு மாவட்ட தலைவர் தோழர் A.சமுத்திரக்கனி தலைமையில் 19.03.2016 அன்று ராஜபாளையம் சேம்பர் ஆ.ஃப் காமர்ஸ் கட்டிடத்தில் எழுச்சியுடன் நடைபெற்றது. E3(N) சங்கத்தின் முதல் மாவட்ட செயலாளர் தோழர் T.ராதாகிருஷ்ணன் தேசியக்கொடியினை ஏற்றி வைக்க மாவட்ட அமைப்பு செயலாளர் தோழர் P.சிவஞானம் நமது சங்கக் கொடியினை ஏற்றி வைத்தார். மாவட்ட உதவி செயலாளர் தோழர் M.முத்துசாமி அஞ்சலி உரை நிகழ்த்திய பின்னர் மாவட்ட செயலாளர் தோழர் S.ரவீந்திரன் அறிமுக உரை ஆற்றினார். இந்த விரிவடைந்த மாவட்ட செயற்குழ்வினை மாநில உதவி செயலாலர் தோழர் M.முருகையா துவக்கி வைத்தார்.

பின்னர் நடைபெற்ற சேவை மேம்பாட்டுக் கருத்தரங்கில் மாவட்ட செயலாளர் தோழர் S.ரவீந்திரன், ராஜபாளையம் கிளை செயலாளர் தோழர் T.முத்துராமலிங்கம், துணை பொது மேலாளர் திரு S.ராதாகிருஷ்ணன் மற்றும் விருதுநகர் மாவட்ட முதன்மை பொது மேலாளர் திருமதி S.E.ராஜம் ITS ஆகியோர் தங்களின் கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

அதற்கு பின்னர் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன், நமது மத்திய, மாநில சங்கங்கள் இந்த மூன்றாண்டுகளில் ஆற்றிய பணிகள் மற்றும் சாதனைகளையும் நமது வெற்றிக்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகள் தொடர்பாகவும் விரிவாக எடுத்துரைத்தார்.

மதிய உணவு இடைவேளைக்கு பின் தோழர் T.ராதாகிருஷ்ணன் மற்றும் தோழர் P.சிவஞானம் ஆகியோரின் பணி நிறைவு பாராட்டு விழா நடைபெற்றது. இதில் மாவட்ட தலைவர், மாவட்ட செயலாளர், மாநில செயலாளர், மாநில உதவி செயலாளர் ஆகியோருடன் CITU மாவட்ட தலைவர் தோழர் C.கணேசன் மற்றும் AIBDPA மாவட்ட செயலாளர் தோழர் M.அய்யாசாமி ஆகியோர் தோழர்களின் இயக்க பணிகளை நினைவு கூர்ந்து பாராட்டினார்கள். தோழர்களின் ஏற்புரைக்கு பின் மாவட்ட அமைப்பு செயலாளர் தோழர் N.ராதாகிருஷ்ணன் நன்றி கூற கூட்டம் நிறைவுற்றது.

இந்த விரிவடைந்த மாவட்ட செயற்குழுவிற்கு விருது நகர் மாவட்டம் முழுவதும் இருந்து 60க்கும் மேற்பட்ட பெண் ஊழியர்கள் உட்பட 200க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர். உற்சாகத்துடனும், எழுச்சியுடனும் நடைபெற்ற இந்த விரிவடைந்த மாவட்ட செயற்குழு வருகின்ற 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலில் விருதுநகர் மாவட்டம் பெற இருக்கின்ற தொடர் வெற்றிக்கு கட்டியம் கூறும் கூட்டமாக இருந்தது. இதற்கான தயாரிப்பு பணிகளை மேற்கொண்ட விருதுநகர் மாவட்ட சங்கத்திற்கும், ராஜபாளையம் கிளை தோழர்களுக்கும் தமிழ் மாநில சங்கம் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.















